நாடாளுமன்றக் கூட்டத் தொடரில்

தி.மு.க. எம்.பி.களின் கேள்விகளால் திக்கித்திணறி நின்ற ஒன்றிய அரசு!

‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, டிச.23-

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரில் தி.மு.க. எம்.பி.களின் கேள்விகளால் திக்கித் திணறி நின்ற ஒன்றிய அரசு என்று ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விமர்ச்சித்துள்ளது.

இது குறித்து 22.12.2024 தேதிய தினகரன் நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:-

தினகரன்

டிசம்பர் 22, 2024 ஞாயிற்றுக்கிழமை

தட்டி எழுப்பிய குரல்கள்

இந்திய நாடாளுமன்றத்தின் நடப்பாண்டுக்கான குளிர்கால கூட்டத்தொடர் கடந்த நவம்பர் மாதம் 25ம்தேதி தொடங்கியது. நேற்று முன்தினம் (டிசம்பர் 20) வரை நடந்தது. கூட்டத்தொடர் தொடங்குவதற்கு முன்பே, அவையை சுமூகமாக நடத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று ஆளும் ஒன்றிய அரசு, எதிர்க்கட்சிகளுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தது. கூட்டத்தொடரில் தான் சார்ந்த கட்சியின் முகமாக தீட்டி வைத்திருந்த அஜெண்டாக்களை நிறைவேற்றி விட வேண்டும் என்பதில் மட்டுமே முனைப்பாக இருந்தது ஒன்றிய அரசு.

ஆனால் இதைபொருட்படுத்தாமல் ஒட்டுமொத்த ஜனநாயகத்தின் குரலாக அவையில் ஒங்கி ஒலித்தனர் எதிர்க்கட்சி எம்.பி.க்கள். ‘ஒரே நாடு ஒரே தேர்தல், வக்புவாரிய மசோதா, மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட், சட்டப்பேரவை தேர்தல், சட்டப்பிரிவு 370 நீக்கம், மணிப்பூரில் மீண்டும் வெடித்திருக்கும் கலவரம், அதானி விவகாரம்” என்று எதிர்க்கட்சிகள் எழுப்பிய கேள்விகளுக்கு எல்லாம் திக்கித்திணறி நின்றது ஒன்றிய அரசு. இதேபோல் சட்டமேதை அம்பேத்கர் குறித்த உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் சர்ச்சை பேச்சு, துணை ஜனாதிபதி மீதான நம்பிக்கையில்லா தீர்மானம் என்று அனைத்தும் மக்கள் மன்றத்தில் பரவலாக பேசப்பட்டது.

இது ஒருபுறமிருக்க, நடந்து முடிந்த குளிர்கால கூட்டத்தொடரில் ஒட்டுமொத்த இந்தியாவின் கவனத்தையும் ஈர்த்தவர்கள் நமது தமிழ்நிலத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்பது இங்கே பதிவு செய்யப்பட வேண்டிய ஒன்று. அதாவது மக்களவையானது 54.5 சதவீதமும், மாநிலங்களவை 40 சதவீதமும் தான் இயங்கியது என்று நாடாளுமன்ற விவகாரத் துறை தகவல் தெரிவித்துள்ளது. இந்தவகையில் பல்வேறு களேபரங்கள் நடந்த சூழலிலும் ஒவ்வொரு தி.மு.க. உறுப்பினரும் மக்களின் உரிமைக்குரலாய் ஒலித்துள்ளனர்.

“ஒரே நாடு, ஒரே தேர்தல் குறித்து திமுக மக்களவை குழுத்தலைவர் டி.ஆர்.பாலு, மதுரை டங்ஸ்டன் சுரங்க அனுமதி ரத்து குறித்து நாடாளுமன்ற குழுத்தலைவர் கனிமொழி, அவைக்கு பிரதமரே வருவதில்லை என்பதை சுட்டிக்காட்டி திருச்சி சிவா, கேசவானந்தபாரதி வழக்கு என்று அரசியல் சட்ட நுணுக்கத்துடன் ஆ. ராசா, மாநில உரிமைகள், மதவாத அரசியல் குறித்து ஜெகத்ரட்சகன், வானிலை அறிவிப்பு தொழில்நுட்ப மேம்பாடு குறித்து தயாநிதி மாறன்,” என்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் பேசி ஒன்றிய அரசை தட்டி எழுப்பினர்,” என்று பெருமிதம் தெரிவித்துள்ளார் நமது முதல்வர்.

2024 நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளுக்கு பிறகு ஆளும் கட்சியை விட, எதிர்க்கட்சிகளின் செயல்பாடுகளை மக்கள் கூர்ந்து நோக்குகின்றனர். அதிலும் குறிப்பாக தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாணியில், அனைத்து எதிர்க்கட்சி உறுப்பினர்களும் குரல் எழுப்ப ஆரம்பித்துள்ளனர். நமது மாநிலத்தின் உறுப்பினர்கள் முன்வைக்கும் பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வுகள், கோரிக்கைகள் என்பது நாட்டுக்கே தேவையான ஒன்றாக உள்ளது. இதன்காரணமாகவே மற்ற மாநிலங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இவர்கள் முன்னோடிகளாக திகழ்கின்றனர்.

நாற்பதுக்கு நாற்பது என்றொரு தேர்தல் வெற்றி கிடைத்தது. இவர்கள் நாடாளுமன்றத்திற்கு சென்று என்ன செய்யப் போகிறார்கள்? என்று சிலர் கேள்வி எழுப்பினர். ஆனால் அவர்கள் எல்லாம் வாயடைத்துப் போகும் வகையில் திராவிட முன்னேற்றகழக நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயல்பாடுகள் அமைந்துள்ளது என்று பதிலடி ஒன்றையும் முதல்வர் பதிவு செய்துள்ளார். அதே நேரத்தில் தமிழகத்து மண்ணில் இருந்து நாடாளுமன்றத்திற்கு சென்றுள்ள இவர்கள் அனைவரும் கலைஞர் வளர்த்தெடுத்து அனுப்பி வைக்கப்பட்ட திராவிட ஆற்றலாளர்கள் என்பதையும் கோடிட்டு காட்டி அவர்களின் தனித்துவத்தையும் உணர்த்தியுள்ளார் முதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

சின்னதம்பி பெரியதம்பி

சின்னதம்பி : ஏண்ணே; வாக்குச்சாவடி மையங்களில் பதிவான சி.சி.டி.வி. காட்சிகள் உள்ளிட்ட மின்னணு ஆவணத்தை ஆய்வு செய்யத் தடை விதித்து, வெளிப்படைத் தன்மையை நீக்கி, ஒன்றிய பா.ஜ.க. அரசு, தேர்தல் விதியில் திருத்தம் கொண்டுவந்து விட்டார்களாமே ?

பெரியதம்பி : ஆமாம் தம்பி; ஒளிவு மறைவற்ற வெளிப்படைத் தன்மையைத் தவிர்த்து வெறுப்பவர்கள், இருளை நேசிப்பவர்கள்; அனைத்தையும் இருட்டிலேயே முடித்துச் சாதித்துவிட முனைபவர்கள்.

ஜனநாயகத்தின் அடிப்படைக் கூறுகளில் ஒன்று வெளிப்படைத்தன்மை. வெளிப்படைத்தன்மை இல்லை என்றால், ஏதோ கூது இருக்கிறது என்று பொருள். ஒளியிலேதான் ஜனநாயகம் மிளிரும்; இருளில் அல்ல.

“கயமை புரியும் ஒவ்வொருவரும் ஒளியை வெறுப்பர்” என்பது ஏசுநாதரின் வாக்கு !

சின்னாளப்பட்டியில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!

அமைச்சர் ஐ. பெரியசாமி துவக்கி வைத்தார்

திண்டுக்கல், டிச.23-

சின்னாளபட்டி, செக்காபட்டிக்கு நலத்திட்ட உதவிகளை துவக்கி வைக்க வந்த ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு வாணிப செட்டியார் சமூகம் சார்பாக சமுதாய தலைவர்கள் மேளதாளத்துடன் உற்சாக வரவேற்பு அளித்தனர். சுகாதார வளாகத்தை 2வது வார்டு மக்கள் கமிட்டி அமைத்து பாதுகாக்க வேண்டும் என அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்.

திண்டுக்கல் மாவட்டம், சின்னாளபட்டி சிறப்பு நிலை பேரூராட்சிக்கு உட்பட்ட 2வது வார்டு செக்காபட்டியில் ரூ.28லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட சுகாதார வளாகத்துடன் கூடிய குளியலறை திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ராஜா தலைமை தாங்கினார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி, தி.மு.க. தலைமை செயற்குழு உறுப்பினர் நடராஜன், கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, ஒன்றிய செயலாளர் பாறைப்பட்டி ராமன், பிள்ளையார்நத்தம் முருகேசன், பேரூராட்சி மன்றத்தலைவர் பிரதீபாகனகராஜ், துணைத்தலைவர் ஆனந்தி பாரதிராஜா, பேரூர் கழக செயலாளர் மோகன்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். 2வது வார்டு திமுக உறுப்பினர் சங்க ரேஸ்வரி வரவேற்று பேசினார். விழாவில் குளியலறையுடன் கூடிய சுகாதார வளாகத்தை திறந்து வைத்து விட்டு பொதுமக்கள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ. பெரியசாமி அவர்கள் சின்னாளபட்டியிலேயே செக்காபட்டியில் மட்டும் தான் நவீன வசதிகளுடன் குளியலறையுடன் கூடிய சுகாதார வளாகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதை இப்பகுதி மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சுகாதார வளாகத்தை நாம் எப்படி நமது வீடு மற்றும் கோவிலை சுத்தமாக வைத்திருப்போமோ அதுபோல இந்த சுகாதார வளாகத்தையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். அதற்கு இங்குள்ள சமுதாய மக்கள் ஒரு கமிட்டி அமைத்து சுகாதார வளாகத்தை பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும் என்றார். இப்பகுதி மக்கள் தங்களுக்கு பகுதிநேர நியாயவிலைக்கடை வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்கள். உடனடியாக அவர்களின் கோரிக்கை நிறைவேற்றி கொடுக்கப்படும். மேலும் இப்பகுதியில் கழிவுநீர்கள் தேங்காதபடி வடிகால்கள் அமைத்துக் கொடுக்கப்படும் என்றார். அப்போது அங்கு கூடியிருந்த நூற்றுக்கணக்கான மக்கள் மகிழ்ச்சியில் கைதட்டி ஆரவாரம் செய்தனர். முன்னதாக 2வது வார்டு வாணிப செட்டியார் சமுதாயத்தினர் சார்பாக அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு மரியாதை அளிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் இரா.சக்திவேல், ஆத்தூர் வட்டாட்சியர் முத்து முருகன், சமூக பாதுகாப்பு திட்ட வட்டாட்சியர் தனுஷ்கோடி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், சின்னாள பட்டி பேரூர் கழக முன்னாள் செயலாளர்கள் அறிவழகன், எஸ்.கே.துரை, பாலகிருஷ்ணன், முன்னாள் பேரூராட்சி மன்றத் துணைத் தலைவர் எம்.வி.முருகன், சின்னாளபட்டி பேரூர் கழக பொருளாளர் எஸ். ஆர்.முருகன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் காங்கேயன், ராஜ கணேஷ், மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், செயல் அலுவலர்கள் பட்டி வீரன்பட்டி கோபிநாத், சின்னாளபட்டி இளவரசி, பேரூராட்சி துப்புரவு ஆய்வாளர் கணேசன், பேரூராட்சி அலுவலக அலுவலர்கள் கலைச்செல்வி, இராமமூர்த்தி, பொறியாளர் பிரிவைச் சேர்ந்த ஆறுமுகம், மின் பணியாளர் சரவணபாண்டியன், துப்புரவு மேற்பார்வையாளர் சரளா, ஒன்றிய பிரதிநிதிகள் வடக்குத் தெரு சந்திரன், தம்பித்துரை, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

திருப்பத்தூர் தொகுதியில் ரேஷன் கடை உட்பட புதிய கட்டடங்கள்!

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் திறந்து வைத்தார்!

சிவகங்கை, டிச.23 -

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதிக்கு உட்பட்ட ஓ. சிறுவயலில் ரூபாய் 12 லட்சம் செலவில் புதிதாக அமைக்கப்பட்ட ரேஷன் கடை திறப்பு விழா, தி. சூரக்குடி ஊராட்சி திருவேலங்குடியில் ரூபாய் 12லட்சத்தில் நூலகக்கட்டிடம், ரூபாய்7லட்சத். தில் புதிதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிலையதிறப்பு விழா ஆக மொத்தம் ரூபாய் 31லட்சத்து 30ஆயிரம் மதிப்பிலான புதிய கட்டிடங்கள் திறப்பு விழா தேவகோட்டை சார் ஆட்சியர் ஆயுஸ் வெங்கட் பட் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஊராட்சிகள் இயக்குனர் கேசவதாசன் வரவேற்று பேசினார் .

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர். பெரியகருப்பன் பேசியதாவது. தமிழகத்தில் மொத்தம் 445 ஊராட்சிகள் உள்ளது . இந்த ஊராட்சிகளில் தி. சூரக்குடி ஊராட்சி பொது மக்கள் பாராட்டுடன் அனைத்துஅதிகாரிகள் ஒத்துழைப்புடன் நல்ல முறையில் சிறப்பாக பணியாற்றி வருகின்றது. அவர்களது பதவி காலத்தில் பல்வேறு திட்ட பணிகளை சிறப்பான முறையில் மக்களுக்கு செய்து கொடுத்துள்ளார்கள். தமிழக முதல்வர் தளபதி அவர்கள் பொறுப்பேற்ற நாளிலிருந்து பெரியநகரங்களுக்கு இணையாக கிராமங்கள் வளர்ச்சி அடைய வேண்டும். அடிப்படை கட்டமைப்பு வசதிகள் அமைய வேண்டும் என்று விரும்பி அதற்கான திட்டங்களை தீட்டி வருகிறார். அத்திட்டங் கள் நிறைவேற நிதியும் ஒதுக்கீடு செய்து வருகிறார். இங்கு கடந்த மூன்றரை ஆண்டுகளில் இந்த ஊராட்சியில் 5 கோடியே 83 லட்சம்மதிப்பில் பணிகள் 139 பணிகள் நடைபெற்று உள்ளது .இதில் 135 பணிகள் முடிவடைந்துள்ளது. மீதி உள்ள பணிகளும் விரைவில் முடிவடையும். இந்திய தர நிர்ணய த்தின் ஐ.எஸ்.ஒ.சான்றினை தி.சூரக்குடி ஊராட்சி பெற்றது பாராட்டிற்குரியது ஆகும். தமிழகத்தில் முதல் ஐ.எஸ்.ஒ.சான்று நமது மாவட்டம் கீழடி பெற்றது. இரண்டாவது விருதினை சூரக்குடி பெற்றுள்ளது . இந்த சான்று பெற்றதற்கு ஊராட்சி தலைவர் முருகப்பன் உட்பட அனைவரையும் பாராட்டுகிறேன். இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் பொது வினியோக திட்டம் சிறப்பாக செயல்படும் மாநிலமாக திகழ்கிறது. இந்த பொதுவினியோக திட்டத்தை தமிழகத்தில் அரசே ஏற்று நடத்துகிறது. பல்வேறு மாநிலங்களில் தனியார் துறை நடத்தி வருகிறார்கள். அரசே இத்திட்டத்தை நடத்துவதால் தமிழகத்தில் சிறப்பாக செயல்படுகிறது. இதற்கு வழி காட்டியவர் முன்னாள் முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆவார். குடிசை மாற்று வாரியத்தை தமிழகத்தில் உருவாக்கிய வரும் தலைவர் கலைஞர். அதேபோல் கிராமங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டும் கலைஞர் ஆட்சியில் தான் திட்டம் கொண்டுவரப்பட்டது . இலவச மின் இணைப்பு திட்டம் 50 ஆண்டுகளுக்கு முன்பாக கலைஞரால் கொண்டுவரப்பட்டது. தற்போதுதான் பல மாநிலங்கள் இத்திட்டத்தினை செயல்படுத்த துவங்கி உள்ளார்கள். .இத்தகைய திராவிட மாடல்ஆட்சியின் பல்வேறு சாதனைகள் கணக்கிட முடியாத சாதனைகளாக உள்ளது. இத்தகைய சாதனைகள் வட மாநிலங்களில் ஓரளவு தான் செய்துள்ளார்கள். தமிழக முதல்வர் தளபதி அவர்களின் முதன்மை திட்டமான காலை உணவு திட்டம் பல்வேறு மாநிலங்களில் அறிமுகபடுத்தப்படு கிறது. அண்டை நாடான இலங்கையில் இத்திட்டம் செயல்பட உள்ளது . இந்தியா மட்டுமின்றி உலகிற்கே வழிகாட்டியாக தமிழகம் உள்ளது. இதற்கு முக்கிய காரணமாக விளங்குபவர் திராவிட மாடல்ஆட்சியின் தலைவர் தளபதி ஆவார். பேரறிஞர் அண்ணா தலைவர் கலைஞர் காட்டிய வழியில் ஆட்சியை நடத்தி வருகிறார். முதல்வர் தலைமையான ஒவ்வொரு துறையும் பல்வேறு பாராட்டு வகைகளை பெற்று வருகின்றது . இதில் தமிழக கூட்டுறவுத்துறை 5 விருதுகளை ஒன்றிய அரசிடம் பெற்றுள்ளது . இந்தியாவிலேயே சிறந்த கூட்டுறவு துறை செயல்படும் மாநிலம் என்ற பெருமையை பெற்றுள்ளது . இத்தகைய பெருமைகளை பெறுவதற்கு முழு காரணம் தமிழக முதல்வர் அவர்களின் ஆக்கமும் ஊக்கமும் ஆகும். மக்கள் நலப் பணிகளை தொடர்ந்து தமிழக முதல்வர்அவர்கள் பல்வேறு நிதி பற்றாக்குறையில் செயல்படுத்தி வருகிறார். இத்திட்டங்கள் தொடர்ந்து கிடைப்பதற்கு தமிழக மக்கள் ஆதரவு தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அமைச்சர் பெரிய கருப்பன் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர்மு. தென்னவன், பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே. எஸ். ரவி, ஒன்றிய கழக செயலாளர் கள் கே.எஸ். ஆனந்த், குன்னக்குடி சுப்பிரமணியன், மாவட்ட கவுன்சிலர் ராதா சுப்ரமணியன் வட்டாட்சியர் ராஜா ,ஊராட்சி மன்ற தலைவர்கள் ஏ.ஆர்.முருகப்பன்,, பெரி. குழந்தைவேல் ஒன்றிய ஆணையாளர்கள் ராஜேஷ்குமார் ,சுந்தரம் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது, மண்டல கூட்டுறவு இனை பதிவாளர் ராஜேந்திர பிரசாத், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி .ராஜ்குமார் துணை மேயர் நா. குணசேகரன் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் முத்துலட்சுமி, பேருராட்சி மன்ற தலைவர்கள் சாந்தி, ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார்,பேருர். கழக செயலாளர் அசோக், மாவட்ட மகளிரணி தலைவி மணிமேகலை முத்துசாமி, அயலக அணி சன்சீமான்சுப்பையா, சோமசுந்தரம் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது உள்பட பொதுமக்கள் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டார்கள். ஆணையர் ராஜேஷ்குமார் நன்றி கூறினார்.

மதுரை தெற்கு மாவட்டம் உசிலம்பட்டியில் கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆலோசனையின படி உசிலம்பட்டி நகர் கழகம் சார்பில் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன், தேனி வடக்கு மாவட்ட செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன் முன்னிலையில், நகர் கழக செயலாளர் எஸ்.ஓ.ஆர்.தங்கப்பாண்டியன் ஏற்பாட்டில் வழங்கிய போது எடுத்த படம். உடன் கழக நிர்வாகிகள் மற்றும் பயனாளிகள் உள்ளனர்.

அமைப்பாளர் தொழிலாளர்கள் – பொதுமக்கள் பயன்பாட்டிற்கு

குற்றாலத்தில் ரூ.1.82 கோடி மதிப்பில் புதுப்பிக்கப்பட்ட திரு.வி.க. தொழிலாளர் ஓய்வு இல்லம்!

அமைச்சர் சி.வெ.கணேசன் தொடங்கி வைத்து பேச்சு!

தென்காசி, டிச.23-

முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க 18.12.2024 அன்று தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் அமைப்புசார் தொழிலாளர்கள், குடும்பத்தினர்கள் மற்றும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக ரூபாய் 1.82 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட திரு.வி.க.தொழிலாளர் ஓய்வு இல்லத்தினை தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன்

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அரசு செயலாளர் கொ.வீரராகவராவ்,தென்காசி மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் ,வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குனர் பா.விஷ்ணு சந்திரன், சட்டமன்ற உறுப்பினர்கள் பழனி நாடார் (தென்காசி)ஈ.ராஜா (சங்கரன்கோவில்) சதன் திருமலைகுமார் (வாசுதேவநல்லூர்) தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு துவக்கி வைத்தார்.

பின்னர் அமைச்சர் சி.வெ.கணேசன் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் கீழ் தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் திரு.வி.க.இல்லம் எனும் தொழிலாளர்களுக்கான ஓய்வு இல்லம் 1983 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இந்த வி.க.தொழி லாளர் ஓய்வு இல்ல வளாகம் 2 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இவ்விடத்தில் 2 படுக்கைகள் கொண்ட 8 அறைகள்,8 படுக்கைகள் கொண்ட 7 பொதுஅறைகள், 24 படுக்கையில் கொண்ட பொது அறை ஒன்று என மொத்தம் 96 நபர்கள் தங்கி பயன்பெறும் வகையில் செயல்பட்டு வருகிறது.இந்த ஓய்வு இல்லத்தை அனைத்து தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அதனைத் தொடர்ந்து திரு.வி.க.இல்ல கட்டிடத்தில் பொதுப்பணித்துறை மூலம் ரூபாய் 1,82,17,500 செலவில் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப் பட்டு அமைப்புசார் தொழிலாளர்கள், அவர்கள் குடும்பத்தினர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் தொழிலாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தைச் சார்ந்த 26 பயனாளிகளுக்கு ரூபாய் 10,85,000 மதிப்பிலான கல்வி,திருமணம், இயற்கை மற்றும் விபத்து மரணம் ஆகிய நலத்திட்ட உதவிகள் வழங்கப் பட்டுள்ளது.கடந்த மூன்று ஆண்டுகளில் 30,134 தொழிலாளர்களுக்கு ரூபாய் 12.54 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தியாவிற்கு எடுத்துக் காட்டாக திராவிட மாடல் ஆட்சி நடத்தும் முதலமைச்சர் அவர்கள் திகழ்கிறார். தொழிலாளர்கள் தான் நாட்டின் முதுகெலும்பு குழந்தைகள்,முதியவர்கள் தவிர அனைவருமே பணியாற்றிக் கொண்டுதான் இருக்கிறோம். குற்றாலம் வி.க.இல்லம் பராமரிப்பின்றி காணப்பட்டது. சென்னை மகாபலிபுரம், வால்பாறை, குற்றாலம் ஆகிய இடங்களில் தொழிலாளர் ஓய்வு இல்லங்கள் உள்ளன.

மேலும் இந்த அரசு இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் நலன் காக்கின்ற அரசாக செயல்பட்டு வருகிறது. இவ்வாறு அமைச்சர் சி.வெ.கணேசன் தெரிவித்தார். நிகழ்வில் நெல்லை தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய செயலாளர் செந்தில்குமாரி,மதுரை கூடுதல் தொழிலாளர் ஆணையர் உமாதேவி, நெல்லை தொழிலாளர் இணை ஆணையர் சுமதி,தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய உறுப்பினர் அன்பு ராஜன் மற்றும் தொழிலாளர் துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை கிழக்கு தொகுதி பொய்கைகரைப்பட்டி ஊராட்சி நாயக்கன்பட்டியில் மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி குடும்ப அட்டைதாரர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் மாவட்டத் துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., ஒன்றிய செயலாளர் மதிவாணன், மாநில இலக்கிய அணி நேரு பாண்டியன் மற்றும் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்ளனர்.